சனவரி
2024

# ஆண்டுக்கான கொள்கை அறிக்கை 2024

2024இற்கும் அதற்கு அப்பாலுக்குமான
நாணய மற்றும்
நிதியியல் துறைக் கொள்கைகள்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# 2024இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள் அறிக்கை

**முனைவர் பீ நந்தலால் வீரசிங்க** | *ஆளுநர், இலங்கை மத்திய வங்கி*
**2024 சனவரி 10**

## *முகப்புரை*

*கடந்த சில ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரமும் அதன் மக்களும் அனுபவித்த சவால்கள் நாட்டின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் மிகவும் கடினமானவையாகக் காணப்பட்டன. இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்கை வழிமுறைகள் சில குறிப்பிடத்தக்களவிலான சமூக-பொருளாதார செலவுகளுடனெனினும் உறுதிப்பாட்டினை மீட்டெடுக்கத் துணைபுரிந்தன. பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து பெறப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டினால் துணைபுரியப்பட்டவாறு குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்கான இலங்கைப் பொருளாதாரத்தின் மீட்சி சீர்திருத்த நிகழ்ச்சி நிரலினை வெற்றிகரமாக தொடர்வதில் தங்கியுள்ளது. இறைத் துறையின் செயலாற்றத்தினை மேம்படுத்துவதுடன் வெளிநாட்டுத் துறைத் தாங்கிருப்புக்களை வலுப்படுத்தும் வேளையில் விலை உறுதிப்பாட்டினையும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினையும் நிச்சயப்படுத்துவதற்கான நம்பகமான வழிமுறைகளை இது உள்ளடக்கியுள்ளது. மேலும், பொருளாதாரத்தின் நீடித்துநிலைத்திருக்கும் மீட்சியை நிச்சயப்படுத்துவதில் ஆளுகையினை மேம்படுத்துதல் மற்றும் சமூக நலனோம்புகைக்கு ஆதரவளித்தல் என்பன தொடர்ந்தும் இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன. பொருளாதார நெருக்கடியின் விளைவினையடுத்துக் காணப்பட்ட எதிர்மறையான தாக்கங்களிலிருந்து திரும்பலொன்றினைப் பதிவுசெய்வதற்கு உதவியுள்ள சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. விலை உறுதிப்பாட்டினை மீட்டெடுத்தல், வெளிநாட்டுத் தாங்கிருப்புக்களை மீள்கட்டியெழுப்புதல், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்தல், அரசிறை மேம்பாடு மற்றும் படுகடன் மறுசீரமைப்பு என்பவற்றினூடாக இறைத் திரட்சியினை வலுப்படுத்தல், வறியவர்களுக்கும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கும் ஆதரவினை வழங்குதல் மற்றும் ஆளுகையினை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் என்பன இதுவரையான காலப்பகுதியில் எட்டப்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகளாகும். நம்பிக்கையை மீட்டெடுப்பதன் மூலமும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பு தொடர்பில் உலகளாவிய ரீதியிலான பல்புடை நிறுவனங்களுக்குத் தொடர்ந்தும் மீள்வலியுறுத்துவதன் மூலமும் இச்சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன. எனவே, பன்னாட்டு சமூகத்தின் நம்பிக்கையை நிலைநிறுத்திக் கொள்வதானது குறித்துரைக்கப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சி நிரலைத் தொடர்வதற்கான கொள்கை வகுப்பாளர்களின் உறுதிப்பாட்டில் தங்கியுள்ளது. இப்பின்னணியில், 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு அதன் ஆணையைப் பிரயோகிப்பதற்கான அர்ப்பணிப்பினூடாக, உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைந்து பேணுவதுடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதன் மூலம் நாடு ஸ்திரமான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு ஆதரவான தூண்டுதலளிக்கின்ற பேரண்டப்பொருளாதார சூழலொன்றினை உருவாக்குவதற்கு மத்திய வங்கி தொடர்ந்தும் முயற்சிக்கும்.*

## 1. 2023இல் பொருளாதாரச் செயலாற்றம்

**இலங்கைப் பொருளாதாரம் 2023இன் பிற்பகுதியில் படிப்படியான மீட்சிச் சமிக்ஞைகளைக் காட்டத் தொடங்கியது.** இலங்கைப் பொருளாதாரத்தில் 2022இன் முதலாம் காலாண்டிலிருந்து காணப்பட்ட தொடர்ச்சியான சுருக்கங்களைத் தொடர்ந்து, 2023இன் மூன்றாம் காலாண்டில் நேர்மறையான பொருளாதார வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டது. முன்கூட்டிய பொருளாதாரக் குறிகாட்டிகள் 2023இன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் நடவடிக்கையின் வலுவான வேகத்தின் தொடர்ச்சித்தன்மையினைச் சமிக்ஞை செய்கின்றன.

**2022இல் முன்னெப்பொழுதுமில்லாத மட்டங்களுக்கு உயர்வடைந்த பணவீக்கமானது ஒரு வருட காலப்பகுதியினுள் ஒற்றை இலக்க மட்டங்களுக்குக் கீழே கொண்டுவரப்பட்டது.** 2022 செத்தெம்பரில் காணப்பட்ட வரலாற்று ரீதியான உயர் பணவீக்க மட்டத்திற்கு மத்தியில், விலை உயர்வு விரைவாகக் கட்டுப்படுத்தப்பட்டதுடன் அதன்பின்னர் வரவேற்கத்தக்கதொரு பணவீக்க வீழ்ச்சிப் பாதையில் நுழைந்து, ஒரு வருட காலப்பகுதியினுள் பணவீக்கம் இலக்கிடப்பட்ட மட்டங்களுக்குக் கீழ் கொண்டுவரப்பட்டது. இலங்கையின் விரைவான பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையானது மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு கொள்கை வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டன. அதேவேளை, பொருளாதாரத்தின் அடிப்படைக் கேள்வி அழுத்தங்களைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கமும் 2023 காலப்பகுதியில் வலுவான பணவீக்க வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது.

**பணவீக்க எதிர்பார்க்கைகள் இலக்கிடப்பட்ட மட்டங்களை அண்மித்து நிலைநிறுத்தப்பட்டுள்ளன.** பொருளாதாரத்தில் நம்பிக்கை மற்றும் உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதனை நோக்காகக்கொண்ட விரிவான கொள்கை வழிமுறைகள் அண்மைக்காலத்தில் வேதனையளிப்பனவாகக் காணப்பட்டாலும், 2022 காலப்பகுதியில் பாரியளவில் நிலைநிறுத்தப்படாமல் தொடர்ந்தும் காணப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகளை உறுதிநிலைப்படுத்துவதில் துணைபுரிந்தன.

**பணவீக்கத்தின் நம்பகமான மெதுவடைவு மற்றும் இலக்கிடப்பட்ட வீச்சினுள் நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பன 2023இன் நடுப்பகுதியில் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கைத் தளர்த்தல் சுழற்சியைத் தொடங்குவதனை அனுமதித்தன.** பணவீக்க மெதுவடைவு, சாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகள், நிலையான பணவீக்கத் தோற்றப்பாடு மற்றும் வெளிநாட்டுத் துறையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு 2023 யூனில் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தளர்த்தத் தொடங்கியது. நாணயக் கொள்கைத் தளர்த்தல் வழிமுறைகள் மற்றும் நிர்வாக வழிமுறைகள் என்பவற்றின் விளைவாக, சந்தை வட்டி வீதங்கள் குறிப்பாக, வைப்பு வட்டி வீதங்கள் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தன. உயர் இடர்நேர்வு மிகைக்கு மத்தியில் அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்களில் காணப்பட்ட நெகிழ்ச்சியற்றதன்மையினால் பகுதியளவில் பங்களிக்கப்பட்டு சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களும் குறைந்ததொரு வேகத்திலேனும் வீழ்ச்சியடைந்தன.

**இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டவாக்கமானது பன்னாட்டு ரீதியிலான சிறந்த நடைமுறைகளுக்கமைவாக, கொள்கை முன்னுரிமைகளின் மேம்பட்டத் தெளிவு மற்றும் மேம்படுத்தப்பட்ட பொதுப் பொறுப்புக்கூறல் என்பவற்றுடன் மத்திய வங்கிக்கு சுயாதீனத்தினையளித்துள்ளது.** பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த தன்மையினை அடைய ஆதரவளிக்கும் அதேவேளையில் முதன்மைப் பணவீக்கத்தினை நடுத்தர காலத்தில் குறித்துரைக்கப்பட்ட இலக்கு மட்டத்தில் பேணுவதை நோக்காகக்கொண்ட நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலானது இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டவாக்கத்துடன், மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக முறையாக அங்கீகரிக்கப்பட்டு, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கொள்கையொன்றினால் முழுமைப்படுத்தப்பட்டது. மத்திய வங்கியின் சுயாதீனத்தினை அதிகரிக்கின்றவேளையில், இலங்கை மத்திய வங்கிச் சட்டம் அதன் கொள்கை நடவடிக்கைகள் தொடர்பில் மத்திய

வங்கியின் பொறுப்புக்கூறலை அதிகரிக்கின்றது. நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தினை ±2 சதவீத இடைவெளி வீச்சிற்குட்பட்டு 5 சதவீத இலக்கில் பேணுவதற்கான நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையொன்று நிதியமைச்சருக்கும் மத்திய வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளுக்குப் பணவீக்க இலக்கினைப் பூர்த்திசெய்யத் தவறுதலானது விலகலிற்கான காரணிகள், மேற்கொள்ளப்பட்டுள்ள பரிகார நடவடிக்கைகள் மற்றும் பணவீக்க இலக்கினை அடைவதற்கு எடுக்கக்கூடிய காலம் என்பவற்றினை விவரிக்கின்ற அறிக்கையொன்றினைப் பாராளுமன்றத்திற்கு மத்திய வங்கி சமர்ப்பிப்பதனைத் தேவைப்படுத்துகின்றது. அத்தகைய அறிக்கை பொது மக்களுக்கு வெளியிடப்படும். இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினூடாக மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட சுயாதீனமானது பிரதானமாக நாணய நிதியிடல் மீதான அதன் கட்டுப்பாடுகள் மற்றும் தீர்மானம் மேற்கொள்கின்ற குழுக்களில் அரசாங்கப் பிரதிநிதித்துவத்தின் நீக்கம் என்பவற்றினூடாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஆளும் சபைக்கு மேலதிகமாக, நாணயக் கொள்கைச் சபை என பெயரிடப்பட்ட தனியாக முடிவெடுக்கின்ற குழுவொன்றின் உருவாக்கமானது புதிய சட்டவாக்கத்தின் மூலம் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கு சுயாதீனமான நாணயக் கொள்கை வகுத்தலின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது. இதற்கமைய, இத்தகைய தெளிவான சட்ட மற்றும் நிறுவனசார் கட்டமைப்புக்களை நிறுவுவதானது நாணயக் கொள்கை உருவாக்க செயல்முறையையும் அதேபோல ஒட்டுமொத்த மத்திய வங்கியின் நிர்வாகத்தினையும் வலுப்படுத்துகின்றது.

**மேம்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களினால் ஆதரவளிக்கப்பட்டு 2023இல் பாரியளவில் மீட்டெடுக்கப்பட்டுள்ள உறுதிப்பாட்டுடன் வெளிநாட்டுத் துறை அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டியுள்ளது.** இது சென்மதி நிலுவை நிலையினை வலுப்படுத்தியதுடன் பன்னாட்டு ஒதுக்குகளின் இயற்கையான கட்டியெழுப்பலினையும் இலங்கை ரூபாவின் வலுப்படுத்தலினையும் வசதிப்படுத்தியது. 2022 ஏப்பிறலில் மிகக் குறைந்தளவிலான மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 இறுதியளவில் ஐ.அ.டொலர் 4.4 பில்லியனிற்கு மேம்பட்டன. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இத்தகையதொரு துரிதமான கட்டியெழுப்பலிற்கு மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கணிசமானளவிலான தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான இரண்டு தொகுதிகளைக் கொண்ட பெறுகைகள் மற்றும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன மூலம் அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பட்ட நிதியியல் ஆதரவு ஆகியன முதன்மைக் காரணங்களாயமைந்தன. சுருக்கமடைந்த இறக்குமதி நடவடிக்கையின் காரணமாக ஒப்பீட்டளவில் மிதமடைந்த வர்த்தகப் பற்றாக்குறையொன்றிற்கு மத்தியில் தொழிலாளர் பணவனுப்பல்களின் குறிப்பிடத்தக்கதொரு மேம்பாட்டின் தாக்கம், சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்களில் சடுதியான மீளெழுச்சி மற்றும் பணிகள் கணக்கிற்கான ஏனைய உட்பாய்ச்சல்கள் என்பவற்றினைப் பிரதிபலித்து வெளிநாட்டு நடைமுறைக் கணக்கானது 2023இல் மிகையொன்றினைப் பதிவுசெய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினை முழுமைப்படுத்தியவாறு நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கொள்கையானது இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 2022இல் பதிவுசெய்யப்பட்ட பாரியளவிலான பெறுமானத் தேய்வினைத் தொடர்ந்து, 2023இல் ரூபாவானது பெறுமான உயர்வினைப் பதிவுசெய்ததுடன் இலங்கை ரூபா உறுதித்தன்மையினைக் காட்டியுள்ளது.

**2022இல் தோற்றம்பெற்ற பொருளாதார நெருக்கடியின் அடிப்படைக் காரணமாக விடாப்பிடியான இறைச் சமநிலையின்மைகளை இனங்கண்டு, இறைத் துறையின் நிலைபேறான நிலையை மீட்டெடுக்கும் நோக்கத்துடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டுடன் இணைந்து அரசிறையின் அடிப்படையிலமைந்த இறைத் திரட்சிப் பாதையொன்றினை அரசாங்கம் மேற்கொள்ளத் தொடங்கியது.** வரி அரசிறைச் சேகரிப்புக்களில்

குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்பொன்றுடன் இறைக் கொள்கைச் சீர்திருத்தங்களின் தாக்கம் 2023இன் அரச நிதிகளில் பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது 2023இலும் அதற்கப்பாலும் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் பொறிமுறைகளின் நடைமுறைப்படுத்தலானது அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் நிதியியல் செயலாற்றம் மேம்படத் துணைபுரிந்துள்ளது. படுகடன் உத்வேகத்தினை நிலைபேறானதன்மையிலான மட்டமொன்றிற்குக் கொண்டுவருவதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக, உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகைத் தொழிற்பாட்டினை அரசாங்கம் வெற்றிகரமாக நிறைவுசெய்தது. மேலும், படுகடன் மறுசீரமைப்பிற்காக உத்தியோகபூர்வ கடன்வழங்குநர் குழு மற்றும் சீனாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கி என்பனவுடனான கோட்பாட்டு ரீதியிலான உடன்படிக்கையொன்று எட்டப்பட்ட வேளையில், ஏனைய கடன்வழங்குநர்களுடன் கோட்பாட்டு ரீதியிலான உடன்படிக்கையொன்றினை விரைவாக எட்டுவதற்கான நல்லெண்ணத்தின் அடிப்படையிலான பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன.

**பாதகமான பேரண்ட நிதியியல் அபிவிருத்திகளிலிருந்து தோற்றம்பெற்ற சீர்குலைவுகளின் காரணமாக இலங்கையின் நிதியியல் துறை அண்மைய ஆண்டுகளில் சவால்மிக்க நிலைமைகளினூடாக பயணித்து வருகின்றது.** இந்நிபந்தனைகள் நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைப் பேணுவதற்கும் வலுப்படுத்துவதற்கும் பல்வேறு கொள்கை வழிமுறைகளை மத்திய வங்கி மேற்கொள்வதனைத் தேவைப்படுத்தின. மேலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்துடன் பல்வேறு கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. நெருக்கடித் தயார்நிலை மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்புக்களை வலுப்படுத்தல் உள்ளடங்கலாக உன்னிப்பான கொள்கைத் தலையீடுகளுடன் நிதியியல் முறைமையானது சிக்கலான காலப்பகுதியொன்றினூடாக மத்திய வங்கியினால் கவனமாக வழிநடத்தப்பட்டமையானது நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு மற்றும் ஒருமைப்பாடு என்பவற்றினை நிச்சயப்படுத்துவதற்கான மத்திய வங்கியின் அர்ப்பணிப்பினை மீள்வலியுறுத்துகின்றது. இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது இலங்கையின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக மத்திய வங்கியினை அங்கீகரித்து அதிகாரமளிக்கின்றது.

**இலங்கையின் நிதியியல் துறையை வழிநடத்தும் சட்டக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு மத்திய வங்கி வழிமுறைகளை மேற்கொண்டது.** 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மத்திய வங்கியின் தீர்மானமெடுக்கின்ற அதிகாரம் மற்றும் தீர்மானமெடுக்கின்ற தத்துவங்கள் என்பவற்றினை வரைவிலக்கிணப்படுத்தும் நோக்கத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட மற்றுமொரு முக்கியமான சட்டவாக்கப் பகுதியாகும். இச்சட்டம், நிதியியல் பாதுகாப்பு வலைப் பொறிமுறைகள் மற்றும் அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய புதிய தீர்மான வழிமுறைகள் என்பவற்றினை அறிமுகப்படுத்தியது. மத்திய வங்கி அதன் தீர்மான அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு தனியானதொரு திணைக்களத்தினை மத்திய வங்கியினுள் நிறுவுவதனையும் இச்சட்டம் வசதிப்படுத்தியது. மேலும், வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு நியதிச்சட்ட அங்கீகாரத்தினை வழங்குகின்றவேளையில் உரிமம்பெற்ற வங்கிகளை ஒழுங்காக முடிவுறுத்துவதற்கான நடைமுறையொன்றினை இச்சட்டம் நிறுவுகின்றது. உரிமம்பெற்ற வங்கிகளுக்குப் பிரயோகிக்கக்கூடிய தீர்மான வழிமுறைகளின் விரிவாக்கத்தைப் பொருத்தமானவாறு மற்றும் பொருந்தும் போது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் இயலச்செய்துள்ளது. பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினூடாக உலக வங்கியினால் வழங்கப்படுகின்ற சலுகை முதலீட்டுத் திட்ட நிதியியல் பொறிமுறையொன்றின் ஈடுபாட்டினூடாக நிதியியல் முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கு இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிதியியல் மற்றும் நிறுவனசார் இயலளவினை வலுப்படுத்துவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், நிதி அமைச்சுடன் இணைந்து இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கான காப்பு நிதியிடல் ஏற்பாடுகளைத் தாபிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய வங்கி,

தற்போதுள்ள 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதற்கும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் அதிலுள்ள ஏற்பாடுகள் பன்னாட்டுத் தரநியமங்களுக்கு இசைவாயிருப்பதனை நிச்சயப்படுத்துவதற்கும் அச்சட்டத்தைத் திருத்துகின்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டம் ஆகியவற்றைத் திருத்துகின்ற செயல்முறையை மத்திய வங்கி மேற்கொள்கின்றது. மேலும், நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டமூலம் ஏற்கனவே பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் சட்டவாக்கமானது அதிகாரமளிக்கப்படாத கடன்வழங்கல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தத் துணைபுரியும்.

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மையினை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.** வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதற்காகப் பல்வேறு ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளை அதிகரிப்பதற்கும் நடுத்தர காலத்தில் அவற்றின் உத்வேகத்தினையும் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மையினையும் மேம்படுத்துவதற்கும் பங்கிலாபங்களின் பிரகடனம் அல்லது இலாபங்களின் திருப்பியனுப்புதல் என்பன தொடர்பிலான வழிகாட்டுதலொன்று 2023இல் வெளியிடப்பட்டது. இது நிச்சயமற்ற காலங்களில் அவற்றின் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மையினை வலுப்படுத்துவதுடன் பொருளாதார அதிர்வுகளை உள்ளீர்ப்பதற்கான அவற்றின் இயலளவினை மேம்படுத்தும்வேளையில் போதியளவிலான மூலதனத்தினைப் பேணுவதன் மூலம் வாடிக்கையாளர்களின் கொடுகடன் தேவைகளுக்குத் தொடர்ந்தும் ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2. 2024இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணயக் கொள்கை உபாயம் மற்றும் கொள்கைகள்

### 2.1. நாணயக் கொள்கை உபாயம் மற்றும் நிலைப்பாடு

நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில், மத்திய வங்கியின் கொள்கை நடவடிக்கைகள் அதன் முதன்மைக் குறிக்கோளான உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதனை அடைவதை நோக்கித் தொடர்ந்தும் நெறிப்படுத்தப்படும் அதேவேளையில் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றல் வாய்ந்த தன்மையினை அடைவதனை வசதிப்படுத்துகின்றது. நாணயக் கொள்கை நடவடிக்கைகள் நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையின்[1] கீழ் அரசாங்கத்துடன் உடன்பட்டவாறு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கத்தினை 5 சதவீத இலக்கில் பேணுவதனை நோக்காகக் கொண்டிருக்கும்.

தற்போது, நாணயக் கொள்கை நிலைப்பாடு தளர்த்தப்பட்டதாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. அடிப்படைப் பணவீக்க அழுத்தங்கள் தணிந்தமையினால் 2023 யூன் தொடக்கம் நாணயக் கொள்கை படிப்படியாகத் தளர்த்தப்பட்டது. 2023 நவெம்பரில் கொள்கை வட்டி வீதங்களின் அண்மைய குறைப்புடன், மேலும் தளர்த்துதலானது குறுங்காலத்தில் இடைநிறுத்தப்பட்டது. இது நாணயக் கொள்கை ஊடுகடத்தல் முழுமையாக செயற்படுவதற்கு போதியளவிலான இடைவெளியினை அனுமதிப்பதோடு பொருளாதாரத்தின் மீதான தேவையற்ற அழுத்தங்களைத் தடைசெய்யும். அண்மைய வரி மற்றும் தீர்வை அதிகரிப்புக்கள் ஆண்டு

[1] நிதியமைச்சருக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையிலான நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கை 2023 ஒத்தோபர் 05ஆம் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானி (அதிவிசேட) இல. 2352/20இல் வெளியிடப்பட்டது.

காலப்பகுதியில் பணவீக்கத்தின் மீதான நிரம்பல் பக்க அழுத்தங்களைத் தோற்றுவிக்கும். இருப்பினும், பணவீக்கத்தின் இவ்வுயர்வு நிர்வாக ரீதியிலான வழிமுறைகளின் காரணமாக ஏற்பட்டுள்ளதுடன் பணவீக்க எதிர்பார்க்கைகள் தொடர்ந்தும் நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளமையினால் நாணயக் கொள்கை நடவடிக்கையின் போக்கில் மாற்றமொன்று தேவைப்படுத்தப்படாதிருக்கும். அடிப்படைக் கேள்வி அழுத்தங்கள் தற்போது தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்பட்டாலும், பணவீக்கத் தோற்றப்பாட்டினை சவாலிற்குட்படுத்தக்கூடிய எதேனும் அபிவிருத்திகள் குறித்து மத்திய வங்கி தொடர்ந்தும் விழிப்புடன் இருக்குமென்பதுடன் இதன்மூலம் உள்நாட்டு விலை உறுதிப்பாடு பேணப்படுவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு நாணயக் கொள்கை நடவடிக்கைகள் முன்கூட்டியே மேற்கொள்ளப்பட முடியும்.

சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களின் படிப்படியான இயல்புநிலைக்குத் திரும்புதல் மற்றும் முதலீட்டாளர் மற்றும் வியாபார மனோபாவங்களை மேம்படுத்துதல் என்பன தனியார் துறைக்கான கொடுகடன் விரிவாக்கத்திற்கு ஆதரவளித்து, அதன்மூலம் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றல் வாய்ந்த தன்மையினையடைவதனை அனுமதிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சூழல்கள் ஆகிய இரண்டிலிருந்தும் தோற்றம்பெறுகின்ற சாத்தியமான இடர்நேர்வுகளையும் சவால்களையும் மத்திய வங்கி அறிந்துள்ளதுடன் இது பொருளாதார நடவடிக்கைகளில் உணரப்பட்ட மீட்சிக்கு தடையாக இருக்கக்கூடும்.

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் நாணய நிதியிடலின் நிறுத்தம், பணவீக்க எதிர்பார்க்கைளை நிலைநிறுத்துதல் மற்றும் அரச பிணையங்கள் மீதான இடர்நேர்வு மிகையின் வீழ்ச்சி என்பன மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் ஊடுகடத்தல் மீதான சாதகமான தாக்கமொன்றினை நடுத்தர காலத்தில் ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, நாணய நிதியிடலின் வெளிநின்ற இருப்பானது மத்திய வங்கிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலினூடாக எதிர்வரும் காலத்தில் படிப்படியாகக் குறைக்கப்படும். மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் தரவுகளினால் உந்தப்பட்டனவாகத் தொடர்ந்தும் காணப்படும் வேளையில் அதன் மையக் குறிக்கோளான உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதனையும் பேணுவதனையும் உறுதிப்படுத்தும் பொருட்டு முன்கூட்டிய வழிமுறைகள் மேற்கொள்ளப்படும்.

ஒரு வருட காலப்பகுதியில் நாணயக் கொள்கை மீளாய்வுகளின் எண்ணிக்கை 2024 தொடக்கம் ஆறாகக் குறைக்கப்பட்டுள்ளதுடன் இது இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் நாணயக் கொள்கைச் சபை இரண்டு மாதங்களில் குறைந்தது ஒருமுறையேனும் சந்திப்பதற்கான தேவைப்பாட்டினை வசதிப்படுத்துகின்றது. நாணயக் கொள்கை அறிவிப்புகளுக்கான முன்கூட்டிய வெளியீட்டு நாட்காட்டியொன்றினை அமைப்பதற்கான மத்திய வங்கியின் அர்ப்பணிப்புடன் இசைந்தொழுகும் விதத்தில், 2024ஆம் ஆண்டிற்கான நாணயக் கொள்கைச் சபைக் கூட்டத் திகதிகள் மற்றும் கொள்கை அறிவிப்புத் திகதிகள் என்பவற்றினையுள்ளடக்கிய பின்வரும் நாட்காட்டி அறிவிக்கப்பட்டுள்ளது.

**நாணயக் கொள்கையினை வெளியிடுவதற்கான முன்கூட்டிய நாட்காட்டி: 2024**

| இல. | நாணயக் கொள்கைச் சபைக் கூட்டம் | நாணயக் கொள்கை அறிவிப்பு |
|---|---|---|
| **1** | 22 சனவரி | 23 சனவரி<br>***நாணயக் கொள்கை அறிக்கை – 15 பெப்புருவரி*** |
| **2** | 25 மாச்சு | 26 மாச்சு |
| **3** | 28 மே | 29 மே |
| **4** | 23 யூலை | 24 யூலை<br>***நாணயக் கொள்கை அறிக்கை – 15 ஓகத்து*** |
| **5** | செத்தெம்பர் 26 | செத்தெம்பர் 27 |
| **6** | நவெம்பர் 26 | நவெம்பர் 27 |

**2.2. நாணய - இறை ஒருங்கிணைப்பு**

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு, 2023இன் பிற்பகுதியில் *‘ஒருங்கிணைப்புப் பேரவை’* தாபிக்கப்பட்டதுடன் அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியின் கொள்கைகள் எவ்வாறு ஒன்றையொன்று பாதிக்கக்கூடுமென்பது தொடர்பில் விரிவாக ஆழ்ந்தாராய்வதனை வசதிப்படுத்தியது. அரசாங்கத்தின் இறைக் கொள்கை நடவடிக்கைகள் மற்றும் மத்திய வங்கியின் நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டுக் கொள்கைகள் என்பவற்றின் சிறந்த ஒருங்கிணைப்பொன்றினை நிச்சயப்படுத்துவதற்கு ஒருங்கிணைப்புப் பேரவை ஒவ்வொரு காலாண்டிலும் ஒன்றுகூடும். பணவீக்கம், நாணய நிலைமைகள் மற்றும் இறைத் தொழிற்பாடுகள் என்பன தொடர்பிலான அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளின் தாக்கம் மீதான மதிப்பீடொன்றுடன் அண்மைய பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள், தோற்றப்பாடு மற்றும் இடர்நேர்வுகள் என்பன குறித்து மத்திய வங்கி தகவல்களைப் பகிர்ந்து கருத்துக்களைப் பரிமாற்றிக்கொள்ளும். பணவீக்கமானது நிரம்பல் பக்க காரணிகள் மற்றும் இறைக் கொள்கை நடவடிக்கைகள் என்பவற்றினால் பாதிக்கப்படுமென்பதுடன் இது மத்திய வங்கியின் கேள்வி முகாமைத்துவ கொள்கைகளினால் நிவர்த்திசெய்யப்படுவதற்கு கடினமாக இருக்கக்கூடும் என்பதனால் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றில் கொள்கை ஒருங்கிணைப்பு முக்கியமானதொன்றாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில், அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் கூட்டாக நிர்ணயிக்கப்பட்ட இலக்கிலிருந்து பணவீக்கம் விலகக்கூடுமென்பதுடன் இது பணவீக்க எதிர்பார்க்கைகள் நிலைநிறுத்தப்படாதிருப்பதற்கு வழிவகுக்கக்கூடும். முன்கூட்டிய கொள்கை ஒருங்கிணைப்பு அத்தகைய நிகழ்வுகளின் தாக்கத்தை முகாமை செய்வதற்கு உதவுகின்றது. மேலும், மத்திய வங்கியின் தீர்மானமெடுக்கின்ற குழுக்களில் அரசாங்கப் பிரதிநிதித்துவமில்லாத பட்சத்தில், இப்பொறிமுறையானது முக்கிய பேரண்டப்பொருளாதாரத் தகவல்களையும் கொள்கைக் கலந்துரையாடல்களையும் காலந்தவறாது பகிர்ந்துகொள்வதன் மூலம் நாட்டில் பேரண்டப்பொருளாதாரக் கொள்கைகளின் ஒருங்கிணைப்பினை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.3. நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல்

பொது மக்கள் உள்ளடங்கலாக பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களுக்கும் கொள்கைத் தொடர்பூட்டலினை மேம்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்பதுடன் இது நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் மைல்கல்லொன்றாகக் காணப்படுகின்றது. பணவீக்கம் மற்றும் உண்மைப் பொருளாதார வளர்ச்சி மற்றும் அதனுடனிணைந்த இடர்நேர்வுகளுக்கான தோற்றப்பாடு குறித்து பொது மக்களுக்கு சிறப்பாகத் தகவலளித்து, அதன்மூலம் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றினை மேலும் மேம்படுத்தும் பொருட்டு மத்திய வங்கி ஆண்டிற்கு இருமுறை நாணயக் கொள்கை அறிக்கையினைத் தொடர்ந்தும் வெளியிடும். அதேவேளை, மத்திய வங்கியின் கொள்கைகள் மீதான வெளிவாரியான நிபுணர்கள் மற்றும் முக்கிய ஆர்வலர்களின் கருத்துக்கள் மற்றும் உள்ளீடுகள் ஆர்வலர் ஈடுபாட்டுக் குழு மற்றும் ஏனைய வழிமுறைகள் போன்ற நிறுவப்பட்ட பொறிமுறைகளினூடாகத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளப்படும். மேலும், முக்கிய ஆர்வலர்களிடையே நாணயக் கொள்கை பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்பதுடன் பொது மக்களின் ஈடுபாட்டை மேலும் மேம்படுத்துவதற்கும் தகவல்கள் மற்றும் தொடர்பூட்டல் இடைவெளிகளைக் குறைப்பதற்கும் திட்டங்கள் வகுக்கப்படும். பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள், கொள்கைகள் மற்றும் தோற்றப்பாடு என்பன தொடர்பான தொழில்சார் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்களிடையே பாரியளவிலான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதானது முன்னுரிமையளிக்கத்தக்கதொன்றாகக் காணப்படுகின்ற வேளையில் தவறான தகவல்களின் பரவுதலானது பாரியளவிலான பொது மக்கள் ஈடுபாடு மற்றும் விழிப்புணர்வுடன் குறைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய வங்கி நேரடிக் கட்டுப்பாட்டினைக் கொண்டிராத மற்றும் நாணயக் கொள்கை நடவடிக்கைகள் அத்தகைய பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதில் குறைந்தளவிலான பயனுள்ளதாயிருக்கும் தற்காலிக நிரம்பலினால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தக் காலப்பகுதிகளிலும் கூட பணவீக்க எதிர்பார்க்கைகளை நெறிப்படுத்துவதில் வினைத்திறன்மிக்க மற்றும் காலந்தவறாத தொடர்பூட்டல் மத்திய வங்கிக்குத் துணைபுரியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கியின் ஒட்டுமொத்த தொடர்பூட்டலின் புலப்படுதன்மையினை மேம்படுத்துவதற்குக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படும். குறிப்பாக, நியதிச்சட்ட மற்றும் ஏனைய வெளியீடுகளின் உள்ளடக்கம் மற்றும் கிடைக்கக்கூடியதன்மை என்பன மேம்படுத்தப்படும் வேளையில் மத்திய வங்கியின் வினைத்திறனான மற்றும் வெளிப்படையான தொடர்பூட்டலினை வளப்படுத்துவதற்கு கிரமமான இற்றைப்படுத்தல்களைப் பகிர்ந்துகொள்ளல், வினவல்களுக்குப் பதிலிறுத்தல் மற்றும் பொதுமக்களுடன் ஈடுபாட்டினைக் கொண்டிருத்தல் என்பன மூலம் பரந்தளவிலான தொடர்பூட்டல் தளங்கள் உபாய ரிதியாகப் பயன்படுத்தப்படும்.

### 2.4. நாணயக் கொள்கையின் நடைமுறைப்படுத்தல்

நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலானது குறுங்கால வட்டி வீதங்களைக் கட்டுப்படுத்துவதுடன் உறுதியாகத் தொடர்புபட்டுள்ளதுடன் இது நிதியியல் இடையீட்டாளர்களுக்கான நிதியிடலின் எல்லைச் செலவைப் பிரதிபலிக்கின்றது. தற்போதைய நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்கான சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தைப் பொருத்தமான மட்டங்களில் பேணுவதற்கு வினைத்திறன்மிக்க நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலிற்கு ஆதரவளிக்கும் நோக்குடன் 2024இல் திரவத்தன்மை எதிர்வுகூறல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. **மிக முக்கியமாக, நாணயக் கொள்கை ஊடுகடத்தலினை மேம்படுத்துவதற்கும் நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் தாக்கத்தைச் சமிக்ஞைசெய்வதற்கும் தற்போதுள்ள இரட்டைக் கொள்கை வட்டி வீதங்களுக்குப் பதிலாக ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றினை நோக்கி நகர்வதனை மத்திய வங்கி பரிசீலனையிற்கொள்ளும்.**

நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலின் வினைத்திறனை மேம்படுத்தல் மற்றும் தற்போதைய மற்றும் எதிர்கால அபிவிருத்திகளை இயலச்செய்தல் என்பவற்றினைக் கருத்தில் கொண்டு, 2025 ஆண்டளவில் புதிய ஏல விற்பனை முறைமைக்கான சுமுகமான மாற்றலொன்றுடன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கான பயன்பாட்டாளர்களுக்குச் சிநேகபூர்வமான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படும். **மேலும் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏல அட்டவணை 2024இல் அறிமுகப்படுத்தப்படுமென்பதுடன் இது சந்தைப் பங்கேற்பாளர்களிடையே திரவத்தன்மை முகாமைத்துவம் மீதான நிச்சயத்தன்மையினை உருவாக்க உதவுகின்றது.** திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏல அட்டவணையானது திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்கள் நடத்தப்படும் திகதிகள் குறித்து வழிகாட்டுதலை வழங்குவதற்கு பங்கேற்பு நிறுவனங்களுக்கு முன்கூட்டி வெளியிடப்படுகின்ற குறிகாட்டி நாட்காட்டியொன்றாகுமென்பதுடன் இது பொதுவாக மத்திய வங்கியினால் பணச் சந்தைத் திரவத்தன்மையினை முகாமைத்துவம் செய்யப் பயன்படுத்தப்படும்.

**பன்னாட்டு ரீதியிலான சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் தற்போதுள்ள கட்டமைப்பினை மத்திய வங்கி மீளாய்வு செய்யும்.** இது ஒதுக்குகளை முகாமைசெய்வதில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான நெகிழ்ச்சித்தன்மையினை மேம்படுத்துவதுடன் கொடுப்பனவு முறைமையினை ஆதரவளிக்கின்ற வேளையில் நாணயக் கொள்கைச் சாதனமொன்றாக நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் பயன்பாட்டினை மேம்படுத்தும். பரந்தளவிலான பொருளாதாரம் மற்றும் நிதியியல் முறைமையின் நலனுக்காக நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டுக் கட்டமைப்பை மேம்படுத்துகின்ற அனைத்தையுமுள்ளடக்கிய இலக்குடன் முன்மொழியப்பட்ட கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஆர்வலர்களின் ஆலோசனையை உள்ளடக்கும்.

**மத்திய வங்கியின் வசதிகளில் பங்கேற்பு நிறுவனங்கள் அதிகளவில் தங்கியிருப்பதானது நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கான சவாலொன்றாகக் காணப்பட்டு, மத்திய வங்கி பொருத்தமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதனைத் தேவைப்படுத்தியது.** சந்தைத் திரவத்தன்மை நிலைமைகள் பங்கேற்பு நிறுவனங்களுக்கு மத்தியிலான கூறாக்கமொன்றினைக் குறித்துக்காட்டியமையினால் மிகை மற்றும் பற்றாக்குறை ஆகிய இரண்டையும் கொண்ட பங்கேற்பு நிறுவனங்களும் மத்திய வங்கியின் வசதிகளைப் பெருமளவில் தங்கியிருந்தமையானது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலமான துணைநில் வசதிகளின் பயன்பாடு மீது மத்திய வங்கி கட்டுப்பாடுகளை விதிப்பதனைத் தேவைப்படுத்தியது. இத்தகைய கொள்கைகள் பணச் சந்தை நடவடிக்கைகளை மீள்செயற்படுத்துவதனை ஆதரவளித்த வேளையில் பாரியளவிலான திரவத்தன்மைப் பற்றாக்குறைகளுடனான வங்கிகள் திரவத்தன்மை மட்டங்களை மேம்படுத்துவதற்கான உள்ளக திருத்த வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதனைக் கட்டாயப்படுத்தின. துணைநில் வசதிகள் மீதான கட்டுப்பாடுகள் சில சாதகமான நன்மைகளை அளித்துள்ளன. சந்தைகளின் உத்வேகத்தினைப் பாதிக்காமல் படிப்படியாக அத்தகைய கட்டுப்பாடுகளை நீக்குதல் குறித்து மத்திய வங்கி பரிசீலிக்கும். அதேவேளை, பன்னாட்டு ரீதியிலான சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் மத்திய வங்கியின் மீது சுயாதீனமான முதனிலை வணிகர்களின் விஞ்சியளவிலான தங்கியிருத்தலினைக் குறைப்பதற்கான மாற்றுப் பொறிமுறைகளை மத்திய வங்கி ஆராயும்.

### 2.5. நாணயக் கொள்கை வகுத்தலில் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தல்

நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பில் நாணயக் கொள்கையை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு முறையான முன்னோக்கிய பார்வையிலமைந்த தீர்மானமெடுக்கின்ற செயல்முறை இன்றியமையாததொன்றாகும். இதற்கமைய, நாணயக் கொள்கை தீர்மானமெடுக்கின்ற செயல்முறையானது எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமை என்பவற்றினால் தொடர்ந்தும் வழிநடத்தப்படுமென்பதுடன் இது பேரண்டப்பொருளாதார எறிவுகளை வசதிப்படுத்துவதற்கும் மத்திய வங்கியில்

மேற்கொள்ளப்படுகின்ற நாணயக் கொள்கை தீர்மானமெடுத்தலிற்கு உதவுவதற்கும் ஏறத்தாழ 2017 தொடக்கம் நடைமுறையிலிலுள்ளது. தற்போது பயன்பாட்டிலுள்ள காலாண்டு எறிவு மாதிரியினால் உந்தப்பட்ட மாதிரிகளின் தொகுப்பானது பேரண்டப்பொருளாதார தோற்றப்பாட்டினை எதிர்வுகூறுவதற்குப் பயன்படுத்தப்படும். மாற்று மாதிரிகளை பரிசீலனை செய்தல் மற்றும் தற்போதுள்ள மாதிரிகளை தொடர்ச்சியானதோர் அடிப்படையில் செம்மைப்படுத்தல் என்பன மிகவும் துல்லியமான எதிர்வுகூறலினைப் பெறுவதற்கு அனுமதித்து, அனைத்தையுமுள்ளடக்கிய பேரண்டப்பொருளாதார பகுப்பாய்வுக்கும் தரவுகளினால் உந்தப்பட்ட நாணயக் கொள்கை உருவாக்கத்திற்கும் வழி வகுக்கும்.

நாணயக் கொள்கை தீர்மானமெடுக்கின்ற செயல்முறையைச் சிறப்பாக ஆதரவளிப்பதற்கு மாதிரியுருவமைத்தல் மற்றும் எதிர்வுகூறல் இயலளவுகள் தொடர்ந்தும் மேம்படுத்தப்படும். மேம்படுத்தப்பட்ட மாதிரியுருவமைத்தல் மற்றும் எதிர்வுகூறல் இயலளவுகளுடன் பணவீக்கம் மற்றும் ஏனைய முக்கிய பேரண்டப்பொருளாதார மாறிகளின் எறிவுசெய்யப்பட்ட பாதைகளின் துல்லியத்தன்மையை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் அத்தகைய எறிவுகளுடன் இணைந்த இடர்நேர்வுகள் பொருளாதாரத்திலுள்ள ஆர்வலர்களுக்கு வெளிப்படையாக தொடர்பூட்டப்படும். மேலும், கொள்கை ஆராய்ச்சியை மேம்படுத்தல் மற்றும் மத்திய வங்கியினுள் ஆரோக்கியமான ஆராய்ச்சிக் கலாசாரமொன்றினைப் பேணுதல் மற்றும் கூட்டிணைந்த ஆராய்ச்சியை விரிவுபடுத்துதல் என்பனவும் முன்னுரிமையுள்ள பகுதிகளாயிருக்கும் என்பதுடன் இது கொள்கைப் பகுப்பாய்வுகளை வலுப்படுத்தத் துணைபுரியும்.

### 2.6. வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

**வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பினை நிறைவுசெய்தல் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிகரமான தொடர்ச்சி என்பன நிலவுகின்ற சந்தை நிச்சயமற்றதன்மைகளை நீக்குவதிலும் நிலைபேறானதோர் அடிப்படையில் முதலீட்டாளர் நம்பிக்கையை மேம்படுத்துவதிலும் கருவியொன்றாயிருக்கும்.**

இறக்குமதிச் செலவினத்தின் எதிர்பார்க்கப்படுகின்ற படிப்படியான மீட்சிக்கு மத்தியில், வணிகப்பொருள் ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பதற்கு ஏற்றுமதித் துறையின் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மையினை நிச்சயப்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிலுள்ள பற்றாக்குறைகளை நடுத்தர காலத்தில் நிலைபேறான மட்டங்களிற்கு இலங்கை குறைப்பதானது இன்றியமையாததொன்றாகும். மேலும், பணிகளிலுள்ள வர்த்தகம் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களின் மேம்பட்ட மிகையொன்றினால் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு ஆதரவளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளுக்கு மேலதிகமாக, மீண்டெழுகின்ற சென்மதி நிலுவை நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு வணிகப்பொருள் ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலுள்ள வர்த்தகம் ஆகிய இரண்டினையும் ஊக்குவிப்பதற்கும் பன்முகப்படுத்துவதற்கும் ஒருங்கிணைந்த முயற்சிகள் இன்றியமையாதனவாயுள்ளன. மேலும், தொழிலாளர் பணவனுப்பல்களின் உத்வேகத்தினை நிலைநிறுத்துதல் மற்றும் படுகடனல்லா கடப்பாட்டு வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்களை கவர்தல் என்பன வெளிநாட்டுத் துறையில் நீடித்த உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதில் சாதனமாயிருக்கும்.

வெளிநாட்டு அதிர்வுகளுக்கு எதிராக தாங்கிருப்பொன்றாகத் தொழிற்படும் பொருட்டு சந்தையினால் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதமொன்றினை பேணுவதற்கு மத்திய வங்கி தொடர்ந்தும் திடசங்கற்பம் பூண்டுள்ளது. சந்தையில் மத்திய வங்கியின் தலையீடானது ஒதுக்குக் கட்டியெழுப்பல் மற்றும் செலாவணி வீதத்தில் ஏதேனும் விஞ்சியளவிலான தளம்பல்நிலையினைக் கட்டுப்படுத்தல் என்பவற்றிற்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சந்தையினால் நிர்ணயிக்கப்பட்ட செலாவணி வீதங்கள் கடந்த காலத்தில் நிலவிய ஏற்றுமதிக்கெதிரான பக்கசார்பு மற்றும் ஊக அழுத்தத்தின்

தேவையற்ற கட்டியெழுப்பல் மற்றும் அதனைத்தொடர்ந்து செலாவணி வீதத்தில் ஏற்படும் தளம்பல் என்பவற்றினைச் சீராக்குவதற்குத் துணைபுரியும். இவ்வகையில், செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மையினை மேலும் இயலச்செய்வதற்கும் ஆதரவளிப்பதற்கும் மத்திய வங்கி ஆழமான மற்றும் அதிகளவிலான திரவ வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை மேம்படுத்துவதற்கும் செலாவணி வீத இடர்நேர்வுகளை முகாமைசெய்வதற்கான போதியளவிலான முறைமைகளை அபிவிருத்திசெய்வதற்கும் மத்திய வங்கி விரும்புகிறது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி உலகளாவிய குறியீட்டை நடைமுறைப்படுத்துவதனூடாகவும் கிடைப்பனவாகவுள்ள சந்தைத் தகவல்களைப் பிரதிபலிக்கின்ற போட்டித்தன்மை வாய்ந்த விலைகளில் சந்தைப் பங்கேற்பாளர்கள் நம்பிக்கையுடனும் வினைத்திறனுடனும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளக்கூடிய வலுவான, நியாயமான, திரவத்தன்மையிலான, திறந்த மற்றும் பொருத்தமான வெளிப்படையான சந்தையொன்றினை ஊக்குவிப்பதற்கான பொதுவான வழிகாட்டல் தொகுதியொன்றினை வழங்குவதனூடாகவும் இது மேலும் ஆதரவளிக்கப்படும்.

வெளிநாட்டுத் தாங்கிருப்புக்களை மீள்கட்டியெழுப்பலானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் முக்கிய கடப்பாடுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்வதன் மூலம் வெளிநாட்டுத் தாங்கிருப்புக்களை மீள்கட்டியெழுப்புவதற்கு மத்திய வங்கி பொறுப்பாக்கப்பட்டுள்ளது. ஒதுக்குப் போதுமாந்தன்மையினை மேம்படுத்துவதற்கும் எதிர்வருகின்ற காலப்பகுதியில் தாங்கிருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம் 2024இல் மேலும் விரிவாக்கப்படும்.

வங்கித்தொழில் முறைமையிலிருந்து எல்லைகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய தரவுகளை நாளாந்தம் சேகரிப்பதற்கு பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையின் கட்டம் 1இனை 2023இல் மத்திய வங்கி வெற்றிகரமாக அங்குரார்ப்பணம் செய்தது. **2024இலிருந்து பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமைத் தரவுகளின் அடிப்படையில், வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு குறிப்பாக, பணிகள் துறையின் வர்த்தகம் தொடர்பான மாதாந்த தரவுகளை அறிக்கையிடுவதற்கு மத்திய வங்கி திட்டமிட்டுள்ளது.** முன்னோக்கிச் செல்கையில், பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையின் முன்னேற்றத்திற்குத் தொடர்ந்தும் ஆதரவளிப்பதற்கும் தரவுகளின் உள்ளடக்கம், துல்லியத்தன்மை மற்றும் காலக்கெடு என்பவற்றினை நிச்சயப்படுத்துவதற்கும் அனைத்து வங்கிகளும் வலியுறுத்தப்படுகின்றன.

## 3. 2024இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நிதியியல் துறைக் கொள்கைகள்

### 3.1. வங்கித்தொழில் துறை தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி மற்றும் உண்மைத் துறைக்கு தொடர்ச்சியான கொடுகடன் பாய்ச்சல்கள் ஊடுகடத்தப்படும் என்ற எதிர்பார்க்கைகளினை பின்பற்றி வங்கித்தொழில் துறையின் நிதியியல் மற்றும் தொழிற்பாடு மீளெழுந்தன்மையை அண்மைய மற்றும் நடுத்தரக் காலத்தில் பேணும் நோக்குடன் பல கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்த மத்திய வங்கி எதிர்பார்க்கிறது.

உரிமம்பெற்ற வங்கிகள் வலுவானதாகவும் போதியளவிலும் மூலதனமயமாக்கப்பட்டவையாகவும் இருப்பதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் ஒன்பது பெரிய வங்கிகளின் மீள்கட்டமைப்படுத்தல் மற்றும் மீள்மூலதனமாக்கலுக்கான ஓர் வழிகாட்டலினை மத்திய வங்கி உருவாக்கியுள்ளது. இது

பேரண்டப்பொருளாதார நிதியியல் நிகழ்வுகள் மற்றும் நாட்டிற்கான படுபடனின் மீள்கட்டமைப்பு என்பவற்றின் அடிப்படையிலான ஓர் கண்டறியும் நடவடிக்கை மற்றும் முன்னோக்கிய அழுத்தப் பரிசோதனை என்பவற்றினூடாக இனங்காணப்பட்ட மூலதன மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பற்றாக்குறைகளை தீர்க்க நாடுகிறது. இந்த வழிகாட்டலுக்கு இசைவாக, 2024இன் முன்னைய பகுதியில் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட மீள்மூலதனமயப்படுத்தல் திட்டங்களை வங்கிகள் சமர்ப்பிப்பதனை மத்திய வங்கி தேவைப்படுத்தும். கண்டறியும் நடவடிக்கை மற்றும் நாட்டிற்கான படுகடன் மீள்கட்டமைப்பு என்பவற்றிலிருந்து எழும் மூலதனம் மீதான சாத்தியமான தாக்கங்களை சமப்படுத்துவதற்காக 2024ற்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் ரூ. 450 பில்லியன் வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகளை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

இடர்நேர்வு அடிப்படையிலான ஒருங்கிணைக்கப்பட்ட மேற்பார்வை கட்டமைப்புக்கிசைவாக உரிமம்பெற்ற வங்கிகளின் நியதிச்சட்ட பரீட்சிப்புக்கள் தீவிரமாக்கப்படவுள்ள அதே வேளையில் முன்கூட்டிய எச்சரிக்கை கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் மூலமான தொடர்ச்சியான கண்காணிப்பு வலுப்படுத்தப்படும்.

வங்கித்தொழில் சட்டத்திற்கு முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் மூலம் உரிமம் பெற்ற வங்கிகளின் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மேலும் வலுவூட்டப்படவுள்ளது. குறைந்தபட்ச உரிமத் தேவைப்பாடுகளை வலுப்படுத்தல், கம்பனி ஆளுகை, பங்குரிமையாளர்களின் பொருந்துந்தன்மை, அத்தியாவசியமெனக் கருதப்படும் போது வெளிநாட்டு வங்கிகளின் துணைக்கம்பனிகளை நிறுவுதல், வங்கியின் உடைமை, கையேற்பு, தொகுப்பு மற்றும் ஒருங்கிணைப்பு, நிதியியலற்ற துணைக்கம்பனிகளின் விற்பனை, ஒருங்கிணைக்கப்பட்ட மேற்பார்வை, கணக்குகள் மற்றும் கணக்காய்வு, விகிதாசாரத்தன்மை, பாரிய வெளிப்படுத்துகைகள் மற்றும் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் என்பவை முன்மொழியப்பட்ட முக்கிய திருத்தங்களுக்குள் உள்ளடக்கப்படும். வங்கித்தொழில் (திருத்த) சட்டமூலம் 2024இன் முன்னைய பகுதியில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், பன்னாட்டுச் சிறந்த நடைமுறைகள் மற்றும் உலகளாவிய ஒழுங்குமுறைப்படுத்துநர்களினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கிசைவாக கம்பனி ஆளுகை தொடர்பான கட்டமைப்பு மேலும் வலுவூட்டப்படும் அதே வேளையில் பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆளுகை கண்டறிதல் மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட முக்கிய பரிந்துரைப்புக்களும் சேர்க்கப்படும்.

தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவம் உள்ள நபர்களுக்கு ஒப்புதல் அளித்தல் மூலம் உரிமம் பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஊழியர்களின் பொருத்தம் மற்றும் தகுதி தொடர்பான மதிப்பீடு வலுவூட்டப்படவுள்ளது. இதனால் பணிப்பாளர்கள் சபையின் பகுப்பாய்வு மற்றும் திறன்கள் மேம்படும். முக்கியமாக, வங்கித்தொழில் துறையின் சொத்துக்களின் 48 சதவீதத்திற்கு வகை கூறும் அரசிற்குச் சொந்தமான வங்கிகள் தொடர்பில் இவ் வங்கிகளின் பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள் தொடர்பில் நிதி அமைச்சுக்கு மத்திய வங்கி வழிகாட்டல் வழங்கவுள்ளது. இதற்கேற்ப அரச வங்கிகளின் ஆளுமையை வலுவூட்டுவதற்கு ஓர் கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது. இது சபைகளின் பெரும்பான்மையானவர்கள் சுயாதீனமான உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என்பதையும், தொழில்சார் அனுபவம் தொடர்பான தெளிவான தேவைப்பாடுகளுடன் திறந்த தேடல் வழிமுறைகளைப் பின்பற்றி சபை மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கான வேட்புமனுக்கள் வங்கிகளின் வேட்புமனுக் குழுவினால் மேற்கொள்ளப்படுவது என்பவற்றினால் சுயாதீனம் உறுதிப்படுத்தப்படும்.

கடந்த காலங்களில், நிதியிடலுக்காக முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த அரசிற்குச் சொந்தமான வங்கிகள் மீது அரசு மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அதீதளவில் தங்கியிருந்தமை நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு பாரிய சவால்களை

ஏற்படுத்தியது. தனிக் கடன்பாட்டாளர்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக தொடர்புடைய கடன்பாட்டாளர்களுக்கெதிராக வங்கிகளின் பாரிய வெளிப்படுத்துகைக்கான முன்மதியுடைய வரையறைகளைக் குறிக்கும் பணிப்புரைகளை வடிவமைக்கும் வழிமுறையை மத்திய வங்கி மேற்கொண்டு வருகிறது. இப் பின்னணியில், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் பெரிய கூட்டுத்தபானங்கள் தங்களது ஐந்தொகைகளை மீளமைக்கத் தேவைப்படுத்தப்படுவதுடன் தமது நிதி மூலங்களையும் பன்முகப்படுத்த வேண்டி வரலாம்.

அண்மைக்காலத்தில் சவால்மிக்க பேரண்டப்பொருளாதார சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்ட தொழில்முயற்சிகளின் நிலைத்திருக்கக்கூடிய புத்துயிர்ப்பினை வசதிப்படுத்துவதற்கும் உரிமம்பெற்ற வங்கிகளின் உயர்ந்த மட்டத்திலான ஆற்றலற்ற சொத்துக்களின் முறையான கையாளலை உறுதிப்படுத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளில் தொழில்முயற்சி புத்துயிர்ப்பு அலகுகளை நிறுவுவதனை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கியானது பரந்த வழிகாட்டல்களை வழங்கவுள்ளது. இது முக்கியமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் மீட்சியில் உரிமம் பெற்ற வங்கிகளின் வகிபாகத்தினை மேலும் வலுப்படுத்தும். மேலும், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு ஆதரவளிக்கும் அதே வேளையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன் வழங்கலிலுள்ள சாத்தியமான கொடுகடன் இடர்நேர்வினை மட்டுப்படுத்துவதற்கு அரசு தற்போது ஓர் தேசிய கொடுகடன் உத்தரவாத நிறுவனத்தினை நிறுவவுள்ளது.

நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதி நடவடிக்கைகளை விருத்திசெய்வதற்கான உரிமம்பெற்ற வங்கிகளின் பங்களிப்பு தொடர்ச்சியாக கண்காணிக்கப்படும் அதே வேளையில் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மற்றும் காலநிலை நிதி சார்ந்த நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஊக்குவிப்பு பொறிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும். இது நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதி வழிகாட்டலுடன் ஒத்திசைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இவை தொடர்பிலான வங்கித்தொழில் துறையின் இயலளவினைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளும் மத்திய வங்கியினால் ஆதரவளிக்கப்படும்.

நடுத்தர காலத்தில், அளவு, செயற்றிறன் மற்றும் நிதியியல் ஆற்றல் தொடர்பிலான நன்மைகளை உருவாக்குவதற்கு பொருத்தமான நிதியியல் நிறுவனங்களுடன் ஒன்றிணைத்தல் இல்லாவிடில் கையேற்புகள் மூலம் ஒருங்கிணைப்பதற்கான முறைகளை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வங்கிகள் நாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. நடுத்தரக் காலத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வழிமுறைகளுக்கு மேற்பார்வை தொழில்நுட்ப தீர்வுகளின் அறிமுகம் மூலம் தற்போதுள்ள மேற்பார்வை இயலளவும் வலுப்படுத்தப்படவுள்ளது.

வங்கித்தொழில் துறையின் ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் மீண்டெழுந்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மற்றும் நிதி அமைச்சுடன் தொடர்ச்சியாக மத்திய வங்கி ஈடுபாட்டுடன் சேர்ந்து செயற்படும்.

### 3.2. வங்கியல்லாத் துறையின் தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

வலுவான மற்றும் உறுதியான வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை கட்டியெழுப்பும் நோக்குடன் 2024 முதல் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பிற்கான முதன்மைத் திட்டத்தின்[2] கட்டம் IIஇன் நடைமுறைப்படுத்தல் மூலம் வங்கியல்லாத் துறையின் உறுதிப்பாடு மேலும் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், 2011 ஆம் ஆண்டின் 42ஆம்

[2] 7 கொடுக்கல்வாங்கல்கள் முழுமையாக நிறைவடைந்துடள்ளதுடன் மேலும் 2 கொடுக்கல்வாங்கல்கள் முன்னேறிச்சென்றுகொண்டிருக்கின்றன என்பதனால் முதன்மைத் திட்டத்தின் பாகம் I முடிவினை அண்மிக்கிறது.

இலக்க, நிதித்தொழில் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்திற்கான திருத்தங்கள், வங்கியல்லா நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதற்காக சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்துவது மற்றும் மீள்பார்வையிடல் உள்ளடங்கலான நடைமுறையிலுள்ள சந்தை அபிவிருத்திகளுடன் இசைவாக தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை திருத்தும் அதே வேளையில் மேற்பார்வை மீளாய்வு வழிமுறைகளை வலுப்படுத்துவது என்பவையும் துறையின் உறுதிப்பாட்டினை மேலும் மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், முன்மொழியப்பட்ட நுண்நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டத்திற்குக் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் அதிகாரிகளுக்கு மத்திய வங்கி ஆதரவளிக்கும். மத்திய வங்கியினால் முன்மொழியப்பட்ட இந்தச் சட்டமானது உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனிகளுடன் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத கடன் கொடுப்பவர்களை ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையில் உள்ளடக்குவதுடன் சந்தை நடத்தை மற்றும் நுகர்வோரின் பாதுகாப்பென்வையை மேம்படுத்த நாடுகிறது. இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் விரைவில் நிறைவேற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.3. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்

2023 இல் நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் சுமுகமான நடைமுறைகளை மத்திய வங்கி தொடர்ந்து உறுதிப்படுத்தியதுடன் 2024இல் டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்களில் பாரிய வளர்ச்சியினை எதிர்பார்க்கிறது.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை அபிவிருத்திசெய்யும் நோக்குடன், 2005ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம் என்பதனை மத்திய வங்கி திருத்தவுள்ளதுடன் கொடுப்பனவு சார்ந்த புத்தாக்கங்களின் விரைவான விரிவாக்கத்திற்கு வசதியளிக்கும் முறையில் 2025இல் புதிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தை சட்டவாக்கஞ்செய்யவுள்ளது. மேலும், டிஜிட்டல் கொடுப்பனவுகளின் விரிவாக்கத்தினை ஆதரவளிப்பதற்கு மத்திய வங்கி ஒழுங்குமுறைகளை திருத்த எதிர்பார்ப்பதுடன், மேலும் நிதியியல் தொழில்நுட்ப தொழில்முயற்சிகளை ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்புக்குள் மேலும் நுழைவதனை வசதியளிப்பதற்கு தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பினை திருத்தவுள்ளது.

சில்லறை கொடுப்பனவு உட்கட்டமைப்பை வலுப்படுத்துவது தொடர்பில், மத்திய வங்கியின் வழிகாட்டலில் வரையறுக்கப்பட்ட தனியார் லங்காபேயானது லங்காபே இணையவழி கொடுப்பனவு இயங்குதளம் மூலம் அரச டிஜிட்டல் கொடுப்பனவு இயங்குதளத்தினை விருத்திசெய்கிறது. இது பொதுமக்களிடமிருந்து கொடுப்பனவுகளை டிஜிட்டல் வழியாக அரச நிறுவனங்கள் பெறுவதனை இயலச்செய்யும். மீண்டெழும் கொடுப்பனவுகளை டிஜிட்டல் ரீதியாக வசதிப்படுத்தும் நோக்குடன் நேரடிப் பற்று வசதியினை நடைமுறைப்படுத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கான ஆணையை மத்திய வங்கி வழங்க எதிர்பார்க்கிறது. இது அட்டவணைப்படுத்தப்பட்ட திகதி ஒன்றில் வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கிலிருந்து ஓர் குறிப்பிட்ட தொகை வரையிலான கொடுப்பனவு தன்னியக்க முறையில் ஒப்புதலளிக்கப்பட்ட மூன்றாந்தர நிறுவனத்தை சேகரிக்க வசதியளிக்கும்.

இலத்திரனியல் பணச் சேவைகள் மூலம் டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பணவனுப்பல்களை மேம்படுத்துவதற்கு, 2024 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இலத்திரனியல் பணக் கணக்குகள் மற்றும் அடிப்படையான இலத்திரனியல் பணக் கணக்குகளுக்கான பெறுமதி எல்லைகள் மேம்படுத்தப்பட்டன. மேலும், இலங்கையில் கொடுப்பனவுகளுக்கு லங்கா கியூ ஆரினை உள்நாட்டு வாடிக்கையாளர்கள் மற்றும்

வெளிநாட்டவர்கள் இரு தரப்பினரும் பயன்படுத்துவதற்கு வெளிநாட்டு கொடுப்பனவு செயலிகள் மூலம் லங்கா கியூ ஆர் பயன்பாட்டினை வசதிப்படுத்தவதுற்கு விரிவுபடுத்தப்படும்.

டிஜிட்டல் கொடுப்பனவுகளின் கிடைக்குந்தன்மை, வழிமுறைகள் மற்றும் நன்மைகள் தொடர்பான விழிப்புணர்வு இல்லாமை என்பது டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்களை பொதுமக்கள் மத்தியில் மேம்படுத்துவதில் மத்திய வங்கியினால் இனங்காணப்பட்ட பிரதானமான சவால்களில் ஒன்றாகும். ஆகவே, 2024 இல், டிஜிட்டல் கொடுப்பனவு முறைகள், தொடர்பான பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் மோசடிகள் மற்றும் ஏமாற்றல்கள் போன்ற சாத்தியமான அச்சுறுத்தல்கள் தொடர்பில் பொது விழிப்புணர்வு அமர்வுகளை பொதுமக்களுக்கு 2024இல் தொடர்ந்து நடத்த மத்திய வங்கி எதிர்பார்க்கிறது. மேலும், சகல பற்றுக்கள் மற்றும் கடன்கள் பற்றிய அதே நேர அறிவிப்புக்களை சகல கொடுப்பனவுச் சேவை வழங்குநர்கள் அனுப்புவதனை தேவைப்படுத்த மத்திய வங்கி எதிர்பார்க்கிறது.

### 3.4. நுகர்வோர் உறவுகளை மேம்படுத்தல்

2023அம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு ஒழுங்குமுறைகளில் குறிப்பிடப்பட்டவாறு முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலில் மத்தியவங்கி ஈடுபடவுள்ளதுடன் மத்திய வங்கியின் மேற்பார்வைக்குக் கீழ் வருகிற ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியில் நிறுவனங்களின் நிதியியல் நுகர்வோரின் பாதுகாப்பு நடவடிக்கைகளின் மீது கவனம் செலுத்திய சந்தை நடத்தை மேற்பார்வையையும் நடைமுறைப்படுத்தவுள்ளது.

நிதியியல் நுகர்வோரின் நம்பிக்கை மற்றும் பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கும் ஓர் சூழலை உருவாக்குவதற்கான மத்திய வங்கியின் செயலூக்கமுள்ள அணுகுமுறையை இந்த சந்தை நடத்தை மேற்பார்வையின் தொடக்கம் எடுத்துக்காட்டுகிறது. இது ஓர் மீண்டெழுந்தன்மையுடையது மட்டுமின்றி அதி உயர்ந்த ஒழுங்குநெறித் தரங்களை பேணும் ஓர் நிதியியல் சூழல் மண்டலத்தை கட்டியெழுப்புவதனை நோக்கிய ஓர் பாரிய முன்னெடுப்பினை இந்த வழிமுறை பிரதிபலிக்கிறது. பன்னாட்டு சிறந்த நடத்தைகளுக்கு இசைவாகவும் நாடு முழுவதும் செயற்றிறனான நிதியியல் உள்ளடக்கத்தினை வசதிப்படுத்தும் முகமாக நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பினை வலுப்படுத்துவதனை நோக்கிய ஓர் முக்கிய முயற்சியாக நிதியியல் நுகார்வோர் ஒழுங்குமுறைகளின் நடைமுறைப்படுத்தல் உள்ளது.

உறுதித்தன்மையை பேணுவதற்கு செயலறிவுடைய தொடர்பாடல் உபாயங்கள் மூலம் நிதியியல் முறைமையில் நம்பிக்கையை கட்டியெழுப்புவது அவசியமாகும். இது தொடர்பில், நிதியியல் குழப்பகாலங்களில் நம்பகத்தன்மையை மீள்நிறுத்துவதற்கும் நிதியியல் முறைமையின் மீண்டெழுந்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் மத்திய வங்கி விரைவாகவும் செயற்றிறனாகவும் பதிலிறுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கும் திடமான நெருக்கடி தொடர்பாடல் வரைமுறைகள் விருத்திசெய்யப்பட்டு கிரமமாக இற்றைப்படுத்தப்படவேண்டும். மேலும், கிரமமான இடர்நேர்வு கணிப்பீடுகள் முன்னுரிமை அடிப்படையில் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும். சாத்தியமான நிதியியல் சவால்கள் பற்றிய தகவல்களை செயலூக்கமாக பகிர்வதன் மூலம் ஆர்வலர்கள் மேலும் தயாராகவும் அறிவூட்டப்பட்ட நிலையிலிருப்பார்கள் என்பதுடன் இது மேலும் உறுதியான ஓர் நிதியியல் சூழலுக்குப் பங்களிக்கும்.

## 4. பரந்த பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கான கொள்கைகள்

மையத் தொழிற்பாடுகளுக்கு மேலதிகமாக, மத்திய வங்கி பரந்த பொருளாதாரத்தினையும் நிதியியல் முறைமையினையும் வலுப்படுத்துவதற்கான பல்வேறு முகவர் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றது. எதிர்காலத்தில் இத்துறைகளில் நடைமுறைப்படுத்த இலக்கிடப்பட்டுள்ள முக்கிய கொள்கைகள் இப்பிரிவில் தொகுத்துத் தரப்படுகின்றன.

### 4.1 அரச படுகடன் முகாமைத்துவம்

பேரண்டப் பொருளாதாரத்தின் உறுதித்தன்மையினையும் நீடித்து நிலைத்திருக்கும் அரச நிதியினையும் ஊக்குவிக்கும் விதத்தில் நாணய மற்றும் இறைக் கொள்கைகள் நன்கு ஒருங்கிணைக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கத்துடனான வினைத்திறனான ஒத்துழைப்பினூடாக பொதுப் படுகடன் முகாமைத்துவத்தில் மத்திய வங்கி குறிப்பிடத்தக்களவு வகிபாகத்தினை ஆற்றுகின்றது. 2023இல் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவைத் தொடர்ந்து, படுகடன் முகாமைத்துவத்தினையும் வெளிப்படைத்தன்மையினையும் மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு 2024இல் பல முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கியமாக, தொடர்பான ஆர்வலர்களுடன் இணைந்து வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு செய்முறைக்கு வசதியளிக்கப்படுவதனூடாக படுகடன் உறுதித்தன்மையினை மீண்டும் அடைந்துகொள்வதற்கு தொடர்ந்து பங்களிக்க முடியும். ஒப்பிடத்தக்க நியதிகளின் மீது வெளிநாட்டு தனியார் கடன்வழங்குவோருடன் நேரகாலத்துடன் தீர்மானமொன்றிற்குவருவது சந்தையில் நிச்சயமற்ற தன்மைகள் விரைவாக இல்லாமல் போவதற்கு பங்களிக்கும் என்பதோடு அவற்றின் மூலம் அரச பிணையங்களுடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுகளை குறைத்துக்கொள்ள முயற்சிப்பதானது விளைவு வளையி விரும்பத்தக்க விதத்தில் கீழ் நோக்கி நகர்வதற்கும் வழிவகுக்கும்.

மேலும், மத்திய வங்கி அரச படுகடன் முகாமைத்துவ முகவராண்மையினை நிறுவுவதில் நிதியமைச்சிற்கு உதவும். நிதியமைச்சின் கீழ் உருவாக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுப் படுகடன் முகாமைத்துவ முகவராண்மை நாட்டின் பொதுப் படுகடன் முகாமைத்துவத்திற்கு முழுமையாக பொறுப்பான அதிகாரசபையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பில், பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டம் 2024 மாச்சில் இயற்றப்படுமென எதிர்பார்க்கப்படுவது பொதுப் படுகடன் முகாமைத்துவ முகராண்மை நிறுவப்படுவதற்கு வழிவகுக்கும். இது 2024 திசெம்பரளவில் தொழிற்பாட்டிற்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.2 வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவ நியதிகளில், மத்திய வங்கி 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளின் வாயிலாக மத்திய வங்கி முன்கூட்டிய செயற்பாட்டினைக் கொண்டதும் சரியான நேரத்திலுமான வழிமுறைகளை தொடர்ந்தும் அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தும். இக்கொள்கை வழிமுறைகள் நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை மேலும் ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில், ஆர்வலர்களின் கரிசனைகளைக் கருத்தில் கொள்வதோடு, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை ஒழுங்குபடுத்துவதுடன் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்சல்களினதும் வெளிப்பாய்ச்சல்களினதும் கண்காணிப்பினையும் வலுப்படுத்தும்.

மேலும், தற்போது காணப்படும் வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகளுடன் இணங்கிச் செல்வதனை மேம்படுத்துவதற்கு, முக்கிய ஆர்வலர்கள் (அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், மட்டுப்படுத்தப்பட்ட முகவர்கள் மற்றும் பொதுமக்கள்) குறைந்தளவு விழிப்புணர்வினைக்

கொண்டுள்ள துறைகளை வினைத்திறனான முறையில் தொடர்ச்சியாக அடையாளங்கண்டு டிஜிட்டல் தளங்களூடாக பொருத்தமான முறையில் தீர்க்கப்படுதலும் அவசியம்.

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மை நிலைமையில் அவதானிக்கப்பட்ட முன்னேற்றங்களுடன் மத்திய வங்கியானது தற்போது காணப்படும் கட்டுப்பாடுகளைப் படிப்படியாக நீக்கும் நோக்குடன் முன்னுரிமை அடிப்படையில் குறிப்பிடப்பட்ட மூலதன வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்களின் மீது தற்போது காணப்படும் கட்டுப்பாடுகளைத் தொடர்ந்தும் மீளாய்வு செய்யும்.

2022 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைள் கண்காணிப்பு முறைமையை மேலும் மேம்படுத்த வேண்டுமென்பதுடன் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவதைக் கண்காணிக்கின்ற பொறிமுறையின் மேம்பட்ட வினைத்திறனையும் காத்திரமான தன்மையினையும் உறுதிப்படுத்துவதை அது உறுதி செய்யும்.

மேலும், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திற்கு தேவைப்படும் திருத்தங்கள் இறுதிப்படுத்தப்பட்டு 2024இன் தொடக்கத்தில் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றமையானது முறைசார்ந்த வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் தொழிற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பினை வழங்குவதன் மூலம் அதனை கூடியளவிற்கு வினைத்திறனுடையதாக்குகின்ற வேளையில், சட்ட மீறல்கள் அத்துடன்/ அல்லது வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுடன் இணங்கியொழுகாமைக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கு அதிகாரங்களையும் வழங்குகிறது.

**4.3 நிதியியல் உளவறிதல்**

பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழுமத்தினால் இணைக்கப்பட்ட பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான இலங்கையின் 3 ஆவது பரஸ்பர மதிப்பீட்டு கட்டமைப்பு, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழிப்பதற்கான நாட்டின் வழிமுறைகளை மதிப்பிடுவதனை 2025 மாச்சில் தொடங்குவதற்கு அட்டவணையிட்டுள்ளது. இலங்கை நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் 40 விதந்துரைப்புக்களுடன் தொழில்நுட்ப ரீதியில் இணங்கிக்கொள்வதனையும் இலங்கையின் பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பானது நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் 11 உடனடி பெறுபேறுகளின் கீழ் காத்திரமாக இருப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான 2021/22இன் தேசிய இடர்நேர்வு மதிப்பீடு அண்மையில் முடிவடைந்ததனைத் தொடர்ந்து இலங்கையின் பணம் தூயதாக்கலைத் தடை செய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பில் பல இடைவெளிகளும் குறைபாடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இது தொடர்பில், காணப்படும் இடைவெளிகளை திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்காட்டுகின்ற நிறுவனரீதியான நடவடிக்கைத் திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதலளித்திருக்கின்றது. இந்நடவடிக்கைகள் பணம் தூயதாக்கலை தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான உலகளாவிய விதந்துரைப்புக்களை பூர்த்திசெய்யும் வகையில் காத்திரமான விதத்தில் நடைமுறைப்படுத்துதவற்காக தொடர்பான ஆர்வலர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் செயலணிக் குழுவொன்று 2024 சனவரி தொடக்கத்தில் நிறுவப்படவுள்ளதுடன் நிதியியல் உளவறிதல் பிரிவு செயலணிக்குழுவின் செயலகமாகச் செயற்படும். இச்செயலணிக்குழுவிற்கு நிறுவனங்களின் அடிப்படையிலான நடவடிக்கைத்

திட்டத்தினை மேற்பார்வையிடுவதற்கான அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளதுடன் இது, 2026 யூலையில் பரஸ்பர மதிப்பீடு வெற்றிகரமாக முடிவடையும் வரை தொழிற்படும்.

மேலும், பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலை முக்கிய நோக்காகக் கொண்டு, பல்வேறுபட்ட ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரிகளிடையே காத்திரமான ஒத்துழைப்பு மற்றும் தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கு வசதியளிக்கும் விதத்தில் பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேசிய இணைப்புக் குழுவின் அதிகாரவரம்பின் கீழ், உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்பொன்றினை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நிதியியல் உளவறிதல் பிரிவு பன்னாட்டு நியமங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் சட்டக் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்காக, பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான சட்டவாக்கத்தின் மூன்று முக்கிய பிரிவுகளுக்கு, அதாவது, 2006ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல் சட்டம், 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் அறிக்கையிடல் கொடுக்கல்வாங்கல் சட்டம் மற்றும் 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் சமவாயச் சட்டம் என்பனவற்றிற்கு திருத்தங்களை அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதனூடாக நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்குப்பட்டு பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேசிய இணைப்பு குழு முறையான குழுவொன்றாக உருவாக்கப்படும். இத்திருத்தங்கள் 2024இல் இயற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிதியியல் உளவறிதல் பிரிவின் கோரிக்கைக்கிணங்க, இலங்கைப் பொலிஸ் பல்வேறுபட்ட மோசடிகள், தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்கள் மற்றும் அதிகாரமளிக்கப்படாத வைப்புக்களை ஏற்றல் நடவடிக்கைகள் பற்றி விசாரிப்பதற்காக விசேட அலகொன்றினை நிறுவியிருக்கிறது. நிதியியல் உளவறிதல் பிரிவு பல்வேறுபட்ட வகைகளில் தோன்றக்கூடிய சட்டத்திற்கு புறம்பான பல்வேறுபட்ட நடவடிக்கைகளை தொடர்ந்தும் அடையாளம் கண்டு தொடர்பான அதிகாரிகளுக்கு எச்சரிக்கைவிடுக்கும். அதேவேளை, நிதியியல் உளவறிதல் பிரிவு நிகழ்நிலை அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வு முறைமையில் “goAML” உபாயப் பகுப்பாய்வுகளை முன்னெடுக்க எதிர்பார்க்கின்ற வேளையில், அறிக்கையிடுகின்ற நிறுவனங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பது தொடர்பாகவும் பணியாற்றுகின்றது. பணம் தூயதாக்கலை தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுடன் தொடர்பான சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புடன் அறிக்கையிடும் நிறுவனங்கள் இணங்கியொழுகுவதனை மேலும் பலப்படுத்தவதற்காக, நிதியியல் நிறுவனங்கள், குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிபுணத்துவம் என்பனவற்றின் நிறுவனத்திலான பரீட்சிப்புக்கள்/ நிறுவனத்திற்கு வெளியேயான பரீட்சிப்புக்களின் மீளாய்வுகள் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையுடன் மேற்கொள்ளப்படவுள்ளன.

## 4.4 பிரதேச அபிவிருத்தி

மத்திய வங்கிச் சட்டத்தின் அமுலாக்கத்தினைத் தொடர்ந்து, பிரதேச அபிவிருத்தி தொடர்பான பிரதான கவனம் இடையேற்பாட்டாளர்களூடாக நிதியியல் வசதிகளை வழங்குவதிலிருந்து இலங்கையில் நிதியியல் வசதிக்குப்படுத்தலை மேம்படுத்துவதை நோக்கி மாறியிருப்பதானது கூடியளவிற்கு நிதியியல் வசதிக்குட்படுத்தலையும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிதியியல் முறைமையினை கட்டியெழுப்புவதன் அவசியம் பரந்தளவிற்கு உணரப்பட்டமையினையும் பிரதிபலிப்பதாகவுள்ளது.

மத்திய வங்கி அதன் சொந்த நிதியிடல் மூலமான திட்டங்கள் தொடர்வதனை நிறுத்திக்கொண்டது. ஏனெனில், மத்திய வங்கிச் சட்டம் அத்தகைய முன்னெடுப்புக்களைத் தொடர்வதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியிருக்கவில்லை. பதிலாக, நிதியமைச்சு அத்தகைய திட்டங்கள் முன்னோக்கிச் செல்லும் விதத்தில் அவற்றை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துகின்றவிடத்து மத்திய வங்கி, அத்தகைய நிகழ்ச்சித்திட்டகளை நடைமுறைப்படுத்துவதற்கான நிதியமைச்சின் இயலாற்றலை கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிக்கும். அதேவேளை மத்திய வங்கி புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் பிரதேச வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்கில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகளின் வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில், உரிமம்பெற்ற வங்கிகளூடாக ஏற்கக்கூடிய வட்டி வீதங்களில் தற்போதைய கொடுகடன் மற்றும் கொடுகடன் துணைநிரப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொள்ளும்.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய நடவடிக்கைத் திட்டம் ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் அரசாங்கக் கட்டமைப்பினூடாக நடைமுறைப்படுத்தப்படும். தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபயாத்தின் கட்டம் I 2024இல் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கபடுவதுடன் கட்டம் II 2025இல் நடைமுறைப்படுத்தப்படும். மேலும், தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கீழ், நிதியியல் அறிவிற்கான அனைத்தையுமுள்ளடக்கிய வழிகாட்டலொன்று 2024இன் தொடக்கத்தில் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம், நிதியியல் ரீதியாக அறிவு படைத்த சமூகமொன்றினை உருவாக்குவதற்காக ஒருமுகப்படுத்தப்பட்ட கொள்கை நெறிப்படுத்தலின் கீழ் அனைத்து முயற்சிகளும் ஒன்று திரட்டப்பட்டு வருகின்றன.

மேலும், பின்தங்கிய, வசதி குறைந்த மற்றும் புறந்தள்ளப்பட்ட குடித்தொகையினர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதனை நோக்கமாக கொண்ட முயற்சிகள் மத்திய வங்கியின் பிரதேச ரீதியான பிரசன்னத்தினை வலுப்படுத்துமெனவும் வேறுபட்ட குடித்தொகை குழுவினரிடையே பிரதேச மட்டங்களிலுள்ள மக்களின் நிதியியல் அறிவினை மேம்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.5 ஊழியர் சேமலாப நிதியத்தின் முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும் இலங்கையின் மிகப்பாரிய ஓய்வூதிய நிதியமான ஊழியர் சேமலாப நிதியம், நிச்சயமற்ற பொருளாதார நிலைமைகள் மற்றும் உள்நாட்டு கடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகளின் தாக்கம் என்பனவற்றினை உள்ளடக்கிய சவால்மிக்க சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் 2023ஆம் ஆண்டில் உத்வேகம் மிக்க நிதியியல் செயலாற்றத்தினை எடுத்துக்காட்டியது. நிதியமானது, நிதியியல் மீளளிப்பு கொடுப்பனவுகளுக்கான ஏற்பாடுகளையும் வசதிப்படுத்தல்களையும் உறுப்பினர் தொடர்பான பணிகளையும் ஏனைய பணிகளையும் வெற்றிகரமாக மேற்கொண்டது.

முன்னோக்கிப் பயணிக்கையில், ஊழியர் சேமலாப நிதியம் அதன் ஆர்வலர்களுக்கு வினைத்திறன் மிக்கதும் காத்திரமானதுமான பணிகளை வழங்குவதற்கு ஏற்ற விதத்தில் தொழிற்பாட்டு வினைத்திறனை அதிகரிப்பதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. அதேநேர அடிப்படையிலான ஆவண ஸ்கானிங் முறையுடன், கிட்டத்தட்ட காகிதாதிகளற்ற தொழிற்பாட்டு முறைமையினை நடைமுறைப்படுத்துவதனூடாக பணிகளின் தரம் மேம்படுத்தப்படும். மேலும், பல்வேறுபட்ட கொடுப்பனவு மார்க்கங்களை வழங்குவதன் மூலம் இலத்திரனியல் சேகரிப்பு நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டமை தொழில்தருநர்களுக்கு கூடுதலான நெகிழ்சிசத்தன்மையினை வழங்கும் விதத்தில் தொடரும், மேலும், ஏற்கனவேயுள்ள செய்முறைகள் மீள பொறியியல்ப்படுத்துவதனையும் நவீன மயப்படுத்துவதனையும் நோக்கங்களாகக் கொண்டு ஊழியர் சேமலாப நிதியத்தில் அனைத்தையுமுள்ளடக்கிய தகவல்

தொடர்பூட்டல் தொழில்நுட்பத் தீர்வொன்று நடைமுறைப்படுத்தப்படும். ஊழியர் சேமலாப நிதியம் உயர் இடர்நேர்விற்குச் சீராக்கம் செய்யப்பட்ட வருமான வீதத்தினை உருவாக்குவதற்காக அதன் முதலீட்டுச் சொத்துப்பட்டியலை பன்முகப்படுத்துவதற்கான மார்க்கங்களை எதிர்பாக்கின்ற அதேவேளையில் ஒட்டுமொத்த நிதியத்தின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

## 5. முடிவுரை

சுதந்திரத்திற்குப் பின்னரான அதன் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியினைத் தொடர்ந்து மீட்சிப் பாதையொன்றில் இலங்கை நுழைந்துள்ளது. 2022 மற்றும் 2023 காலப்பகுதியில் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகள் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை மீட்டெடுக்கத் துணைபுரிந்தன. பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கையின் மீளெழுச்சி, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் வெற்றிகரமான தொடர்ச்சி மற்றும் படுகடன் மறுசீரமைப்புச் செயல்முறையின் முன்னேற்றம் என்பன எதிர்வருகின்ற காலப்பகுதியில் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை தொடர்ந்தும் வலுப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் உதவும். குறுங்காலத்தில், உண்மைப் பொருளாதாரம் நேர்மறையான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்து, நடுத்தர காலத்தில் மேலும் உத்வேகத்தினைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வலுவான பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு குறிப்பாக, விலை உறுதிப்பாடு, வெளிநாட்டுத் துறைத் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மை, பொதுப் படுகடன் நிலைபேறான நிலை மற்றும் பல்வேறு பாதிப்படையக்கூடியதன்மைகளையும் வினைத்திறனின்மைகளையும் ஒழிப்பதற்கு அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் குறிப்பாக, ஊழலுடன் தொடர்புடையவை, என்பவற்றினால் அத்தகைய வளர்ச்சியானது பக்கபலமூட்டப்படும்.

பொருளாதாரம் இம்மீட்சிப் பாதையில் முன்னேற்றமடைகின்றமையினால் பல்வேறு கணிசமானளவிலான சவால்கள் தோற்றம் பெறலாம். அதிகரித்த வரிகள் மற்றும் வரி நிர்வாக மேம்பாடுகள் என்பவற்றினூடாக அரசிறையை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் அத்தியாவசியமானதாயிருப்பினும், அவை குறிப்பாக 2024 காலப்பகுதியில் விலை அழுத்தங்களை உருவாக்கும். இருப்பினும், குறிப்பாக அநேகமான குடித்தொகையினரின் குறைவடைந்த கொள்வனவுசெய்கின்ற சக்திக்கு மத்தியில் அத்தகைய பணவீக்க விளைவுகள் குறுகிய காலத்திலானதாயமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதே நேரத்தில், வெளிநாட்டுத் துறையில் உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கு படுகடனை உருவாக்காத வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை ஈர்ப்பதற்கான முயற்சிகள் மிகவும் முக்கியமானதொன்றாகவுள்ள வேளையில் இறை நிலைபேறானதன்மையினை நிச்சயப்படுத்துவதற்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பு பொருளாதாரத்தின் நீடித்துநிலைத்திருக்கும் மீட்சிக்கு முற்தேவைப்பாடொன்றாகவுள்ளது. பொருளாதார வளர்ச்சிப் பக்கத்தில், பொருளாதார நெருக்கடியிலிருந்து தோற்றம்பெற்ற சில பாதகமான நீடித்த விளைவுகள் நாட்டின் வளர்ச்சி வாய்ப்புக்களில் சில வடுக்களை ஏற்படுத்தக்கூடும். எனவே, பலவீனமான வியாபரம் செய்கின்ற சூழலைப் போன்ற பொருளாதாரத்தின் நீண்டகால கட்டமைப்புசார் தடைகளை நிவர்த்தி செய்வதற்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பானது பேரண்டப்பொருளாதார சூழலிற்கு மாத்திரமன்றி சமூக-பொருளாதார நிலைமைகளினதும் நீடித்துநிலைத்திருக்கும் மீட்சிக்கு இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது.

இலங்கையின் பொருளாதாரம் உலகின் ஏனைய நாடுகளுடன் உயர்ந்தளவில் ஒன்றுடனொன்று இணைந்திருப்பதனைக் கருத்திற்கொள்ளும் போது பன்னாட்டு அபிவிருத்திகள் அதன் சீர்திருத்த முயற்சிகள் உள்ளடங்கலாக இலங்கை மீது குறிப்பிடத்தக்க தாக்கமொன்றினைக்

கொண்டிருக்கும். தற்பொழுது நிலவுகின்ற தளம்பலடைகின்ற புவிசார் அரசியல் சூழலுக்கு மத்தியில் உலகளாவிய அபிவிருத்திகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகள் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் தாக்கமொன்றினை ஏற்படுத்தக்கூடும். மேலும், உள்நாட்டுப் பக்கத்தில், எதிர்பார்க்கப்படும் தேர்தல்கள் ஆர்வலர்களின் தீர்மானம் மேற்கொள்ளலில் சில நிச்சயமற்றதன்மைகளை உருவாக்கி, மீட்சிச் செயல்முறையை குறித்ததோர் அளவிற்குப் பாதிப்படையச் செய்யக்கூடும். மேலும், மோசமடைகின்ற காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளுடன் இணைந்து வானிலை முரண்பாடுகளும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இடையூறுகளைத் தொடர்ந்தும் உருவாக்கலாம். அதேவேளையில், குடியிருப்பாளர்கள் மற்றும் கம்பனித் துறைகளின் ஐந்தொகைகள் மேலும் மோசமடையுமாயின் குடியிருப்பாளர்கள் மற்றும் கம்பனிகளின் படுகடன் மீள்கொடுப்பனவு இயலளவுகளைத் தடுத்து, அதன்மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கக்கூடும்.

இச்சூழலில், பொருளாதாரத்தின் ஸ்திரமான மீட்சிக்கும் நடுத்தர காலத்தில் உயர்ந்தளவிலான, நிலைபேறான மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியை வழங்குவதற்கான அதன் இயலாற்றலிற்கும் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை ஆதரிப்பதற்கான மக்களின் உறுதிப்பாடு இன்றியமையாததொன்றாயுள்ளது. சீர்திருத்த நிகழ்ச்சி நிரலிலிருந்தான ஏதேனும் விலகுதலானது நம்பிக்கையைப் பாதிக்கும் வேளையில் பொருளாதாரத்தின் வளர்ச்சி வாய்ப்புக்களைக் குறிப்பிடத்தக்களவு ஆபத்திற்குள்ளாக்கிப் பொதுமக்களின் நலனோம்புகையில் குறிப்பிடத்தக்க அழுத்தங்களை உருவாக்கும். இது இலங்கையின் பொருளாதாரத்திற்குக் குறிப்பாக, பொருளாதாரமானது ஆழமான பொருளாதார நெருக்கடியொன்றிலிருந்து இப்போதுதான் வெளியேறியுள்ளதென்பதனைக் கருத்திற்கொள்ளும் போது, மீளமுடியாத சேதத்தை ஏற்படுத்தக்கூடும்.

இப்பின்னணியில், மத்திய வங்கியானது விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் முயற்சிக்கும் வேளையில் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த தன்மையினை அடைவதற்கு ஆதரவளிக்கும். ஏதேனும் பணவீக்க அழுத்தங்கள் மற்றும் நிதியியல் முறைமை மீதான ஏதேனும் தேவையற்ற அழுத்தங்கள் என்பவற்றினை நிவர்த்தி செய்வதற்கான காலந்தவறாத மற்றும் முன்கூட்டிய வழிமுறைகளை மேற்கொள்வதற்கு மத்திய வங்கி தொடர்ந்தும் தயாராக இருப்பதனால் பொருளாதார மற்றும் சந்தை அபிவிருத்திகள் தொடர்ந்து கண்காணிக்கப்படும். பணவீக்கமானது நடுத்தர காலத்தில் இலக்கினுள் தொடர்ந்தும் காணப்படுவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு பொருளாதாரத்தில் கேள்வி நிலைமைகள் வினைத்திறனாக முகாமைசெய்யப்படுகின்ற சூழலொன்றினை உருவாக்குவதற்குப் பொருத்தமான வட்டி வீத மட்டங்களைப் பேணுவதன் மூலம் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் மத்திய வங்கி அதன் ஆணையைத் தொடர்ந்தும் பிரயோகிக்கும். இதன் விளைவாக, இது அவசியமான சமூகப் பொருளாதார சூழலை உருவாக்குவதற்குத் துணைபுரிந்து, விலை உறுதிப்பாடு, நிதியியல் உறுதிப்பாடு மற்றும் ஒட்டுமொத்த பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றினை ஊக்குவித்து, உற்பத்தித்திறன் வாய்ந்த முதலீடு, அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் அதன்மூலம் பொது மக்களின் நலனோம்புகை என்பவற்றிற்கு வழிவகுக்கும்.

இக்கொள்கை அறிக்கையானது தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் பொருளாதார நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆதலால், பொருளாதாரத் தோற்றப்பாட்டினைப் பெருமளவு மாற்றியமைக்கக்கூடிய பொருளாதார நிலைமைகளில் ஏற்படும் ஏதேனும் எதிர்பாராத அபிவிருத்திகள் எதிர்பார்க்கப்படும் கொள்கைகளுக்குப் பொருத்தமான சீராக்கங்களைத் தேவைப்படுத்தலாம்.